2016 பிப்ரவரி 20] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11-25

கடந்த 2011 ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்லின்போது, கோயம்புத்தூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், உழவர் பெருந்தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு கோவையில் உள்ள அவரது நினைவிடத்தில் தமிழக அரசு சார்பில் மணி மண்டபம் அமைக்கப்படும் என்றும், 1970 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற பல்வேறு விவசாயிகள் போராட்டங்களின்போது உயிர்நீத்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும் என்றும் நான் அறிவித்திருந்தேன். எனது இந்த அறிவிப்பின் அடிப்படையில், உழவர் பெருந்தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு அன்னாரின் நினைவைப் போற்றி சிறப்பிக்கும் வகையில், கோவை மாவட்டம், வையம்பாளையத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் அரசு சார்பில் மணி மண்டபம் அமைக்கப்படும் என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1970 முதல் 1980 வரை நடைபெற்ற விவசாயிகளின் போராட்டங்களில் காவல் துறை துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான விவசாயிகளின் குடும்பத்தாருக்கு நிதி உதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் போராட்டங்களில் 47 விவசாயிகள் உயிரிழந்துள்ளனர். அவர்களில், 7 பேருக்கு வாரிசுதாரர்கள் இல்லை. எனவே, மீதமுள்ள 40 விவசாயிகளின் குடும்பங்களைச் சார்ந்த வாரிசுதாரர்களுக்கு ஒட்டுமொத்தமாக 5 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 40 விவசாயிகளின் குடும்பங்களுக்கு மொத்தம் 2 கோடி ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) மாற்றுத் திறனாளிகளுக்கான சலுகைகள் பெறுவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்தல் மற்றும் மாநில ஒருங்கிணைப்புக் குழு அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளை சமுதாயத்தில் ஓர் அங்கமாக அனைவரும் ஏற்பதற்கும், வளர்ச்சியில் மாற்றுத்*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 பிப்ரவரி 20

திறனாளிகளும் பங்கேற்கும் வகையில் அவர்களுக்கு சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கும், அவர்களின் முழு பங்கேற்பை உறுதி செய்வதற்கும் வகை செய்யும் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 1993 ஆம் ஆண்டிலேயே மாற்றுத் திறனாளிகளுக்கான தனி இயக்ககத்தை ஏற்படுத்தியதோடு, மாற்றுத் திறனாளிகளுக்கு என விரிவான மாநிலக் கொள்கையையும் 1994 ஆம் ஆண்டே நான் வெளியிட்டேன்.

2011 ஆம் ஆண்டு எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்பு வழங்கிட பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.

6 வயதுக்குட்பட்ட பார்வைத் திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் 5 மாவட்டங்களில் மட்டும் நடத்தப்பட்டு வந்த நிலையில், மேலும் 20 மாவட்டங்களில் இது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த ஆரம்ப நிலை பயிற்சி மையத்திற்குக் குழந்தைகளை அழைத்து வரும் பாதுகாவலர்களுக்குக் கட்டணமின்றி, அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் சலுகை வழங்கியதுடன், நாளொன்றுக்கு அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயணச் செலவுத் தொகை 20 ரூபாயிலிருந்து 40 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) செவித் திறன் பாதிக்கப்பட்ட மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சாதாரண காதொலிக் கருவிகளுக்குப் பதிலாக 10,000 ரூபாய் மதிப்புள்ள அதிக திறன் வாய்ந்த காதொலிக் கருவிகள் வழங்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) பார்வைக் குறைவுள்ள குழந்தைகள் படிப்பதற்கு எளிதாக படிக்க வகை செய்யும்விதமாக எழுத்துக்களைப் பெரிதாக்கி பார்க்கக்கூடிய கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன.

முற்பகல் 11-30

12 மாவட்டங்களில் மட்டும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் செயல்பட்டு வந்த தொழிற்பயிற்சி மையங்கள் மேலும் 20 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத் திறனாளிகள் தொழில் துவங்க மத்திய கூட்டுறவு வங்கிகளிலிருந்து

2016 பிப்ரவரி 20] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பெறப்படும் கடன் தொகைக்கான வட்டியினை அரசே செலுத்துகிறது. மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின்கீழ் இயங்கும் அரசு சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு 5,000 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மேலும், இந்தப் பள்ளிகளில், விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு மாதம் ஒன்றிற்கு, வழங்கப்பட்டு வரும் உணவு ஊட்டுச் செலவினம் 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) விடுதியில் தங்காமல் இந்தப் பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர்களுக்கு சத்துணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட சாதாரண மடக்கு குச்சிகளுக்குப் பதிலாக ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கப்படுகின்றன. மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு அவர்களின் இயலாத் தன்மையின் வகை, பாதிப்பின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு உள்ளடக்கிய கல்வி வழங்கப்பட்டு வருகிறது. நாட்டிலேயே முதன் முறையாக மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கென மாநில ஆதார வள மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 108 நகராட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்கு வசதியாக பொதுக் கட்டடங்களில் அவர்களுக்கென தனிக் கழிப்பிடங்கள் 8 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கு 500 முதல் 3,500 ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. 1,500 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்த வாசிப்பாளர் உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு ஆண்டுதோறும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட, பெட்ரோல் ஸ்கூட்டர்கள் 1,000 எண்ணிக்கை வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 32 நகரும் சிகிச்சைப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான மறு வாழ்வு இல்லங்கள், அரசின் நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் 11 மாவட்டங்களில் செயல்பட்டு வந்தன. மேலும் 21 மாவட்டங்களில் இந்த இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, மன வளர்ச்சிக் குன்றியோருக்கான இல்லங்கள் 21 மாவட்டங்களில் செயல்பட்டு வந்த நிலையில், மேலும் 11 மாவட்டங்களில் அதுபோன்ற

இல்லங்கள் துவங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இதேபோன்று, பசுமை வீடுகள் திட்டத்திலும், தொகுப்பு வீடுகள் திட்டத்திலும் 3 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேசிய வேலை உறுதித் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் 50 சதவிகிதம் அல்லது 4 மணி நேரம் வேலைக்கே முழு ஊதியம் வழங்கப்படுகிறது. எனது தலைமையிலான அரசு செயல்படுத்தும் இத்தகைய திட்டங்களால்தான் மாற்றுத் திறனாளிகளின் நலனைப் பாதுகாப்பதில் சிறந்த மாநிலத்திற்கான விருதை 2013-2014 ஆம் ஆண்டில் பெற முடிந்தது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாற்றுத் திறனாளிகள் மேலும் சில சலுகைகள் கேட்டு அரசுக்குக் கோரிக்கைகள் வைத்துள்ளனர். இதன் அடிப்படையில் தற்போது சில சலுகைகளை அறிவிக்க விரும்புகிறேன்.

1. தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கு 1,000 ரூபாய் மாதாந்திர உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகையைப் பெறுவதற்கு குறைபாட்டின் அளவு 60 சதவிகிதம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது 40 சதவிகிதம் என குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 40 சதவிகிதம் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகளும் ஆயிரம் ரூபாய் மாதாந்திர உதவித் தொகை பெற இயலும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

2. மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கு மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்றோர் அதாவது destitute என்ற நிலையில் இருக்க வேண்டுமென விதிமுறைகள் உள்ளன. எவ்வித வருவாய் இல்லாதவராகவும், 50,000 ரூபாய்க்கு அதிகமான சொத்துகள் இல்லாதவராகவும், வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள 20 வயதுக்கு மேற்பட்ட மகன், மகனின் மகன் அதாவது பேரன், கணவர் அல்லது மனைவி இல்லாதவரே ஆதரவற்றோர் என வரையறுக்கப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரை, ஆதரவற்றோராக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை நீக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, வேலைவாய்ப்பற்ற 40 சதவிகிதத்திற்கு மேல் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளிகள் மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 பிப்ரவரி 20] [செல்வி ஜெ ஜெயலலிதா]

3. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பணிகளில் 3 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்பது அவர்களின் கோரிக்கையாகும். இந்த இட ஒதுக்கீட்டை அரசு தவறாமல் கடைபிடித்து வருகிறது. எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், இதுவரை 5,633 மாற்றுத் திறனாளிகள் அரசு மற்றும் அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத் திறனாளிகளுக்கான ஒதுக்கீடு முழுமையாகக் கடைபிடிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில், தலைமைச் செயலாளர் தலைமையிலுள்ள உயர்மட்டக் குழு கண்காணித்து வருகிறது.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு திட்டங்களைக் கண்காணிக்கவும், அரசுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கவும் சமூக நலத் துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாநில ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் ஒளியேற்றும் என நான் திடமாக நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பதினான்காவது பேரவை இறுதி கூட்டத் தொடர் நிறைவு பெறுவதையொட்டி முதலமைச்சரின் நன்றி மற்றும் பாராட்டு

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 14-வது சட்டமன்றப் பேரவையின் இறுதி கூட்டத் தொடரின், இறுதி நாளான இன்று, மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் வளம் சேர்க்கும் அறிவிப்புகளை வெளியிட்டதில் நான் பெரும் மனநிறைவடைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த 14-வது சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுடன் முதலமைச்சர் என்ற முறையில் இணைந்து பணியாற்றியதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பல சமயங்களில் விவாதங்கள் காரசாரமாக இருந்தாலும், காழ்ப்புணர்ச்சி இல்லாமல் செயல்பட்ட சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தங்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*